# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

# TENKASI.

**Date : 03.02.2026**

**OS No. : 356/2021**
**Pw : 1**

**Name : திருமதி. ஜெசிந்தா**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சிக்காக அனுமதிக்கப்படுகின்றார்.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் ஏற்கெனவே இந்நீதிமன்றத்தில் எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்து எனது தரப்பில் 16 ஆவணங்களை குறியீடு செய்துள்ளேன். இன்று எனது தரப்பில் மேலும் ஒரு ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். அது 04.12.1988ம் தேதிய பிராது தபசில் சொத்துக்கள் மற்றும் வேறு சொத்துக்களை பொறுத்து சூசைமரியான் நாடார் எழுதி வைத்த குடும்ப ஏற்பாடு பாகப்பிரிவினை உறுதி பத்திரத்தின் நகல் ஆகும். அது **வா.சா.ஆ. 17** ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.

**1ம் பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) 04.02.1988ம் தேதிய குடும்ப ஏற்பாடு பாகப்பிரிவினை உறுதிப்பத்திரம் எழுதி வைத்த சூசைமரியான் என்பவர் என்னுடைய மாமனார் ஆவார். மேற்படி வா.சா.ஆ–17 ஆவணத்தின்படிதான் எங்களுக்கு பிராது தபசில் சொத்துக்களில் பாகம் உள்ளது என்பதுதான் எங்களது கட்சியாகும். பொதுவாக இப்படி குடும்ப ஏற்பாடு செய்தால் குடும்ப வாரிசுகள் அனைவருக்கும் ஒவ்வொரு நகல் வழங்குவது வழக்கம் என்றால் சரிதான். அவ்வாறுதான் எங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது மாமனாரின் கையொப்பம் எப்படி இருக்கும் என்பது எனக்கு தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும்

05.07.1993ம் தேதியில் எனது மாமனார் எழுதி வைத்த குடும்ப ஏற்பாடு ஆவணத்தில் உள்ள கையொப்பம் எனது மாமனாருடையது கிடையாது. இன்றைய தினம் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 17 ஆவணத்தில் உள்ள கையொப்பம் எனது மாமனாருடையது என்றும், 05.07.1993ம் தேதிய ஆவணத்தில் உள்ள கையெழுத்து எனது மாமனாருடையது கிடையாது என நான் சொல்வதற்கு என்ன காரணம் என்றால் வா.சா.ஆ.17 ஆவணம் ஏற்படுத்தப்பட்டபோது நாங்கள் உடன் இருந்தோம், 05.07.1993ம் தேதிய ஆவணம் ஏற்படுத்தப்பட்ட விவரம் எங்களுக்கு தெரியாது, அதில் உள்ள கையொப்பமும் எனது மாமனாருடையது கிடையாது. நான் மேற்படி சூசைமரியானின் மகன் பிரின்ஸ் என்பவரது மனைவி என்றால் சரிதான்.

2) வா.சா.ஆ.17 குடும்ப ஏற்பாடு ஆவணத்தில் பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளதுபடி நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டனவா என்பது குறித்து நான் எந்த ஆதரவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் அந்த நிபந்தனைகளை நிறைவேற்றியது எனது கணவரின் சகோதரர்கள்தான். மாதாமாதம் எனது கணவர் அவரது தகப்பனாருக்கு பணம் கொடுத்த வகைக்கு எந்த ரசீதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் எனது கணவர் பணம் கொடுத்ததை நான் பார்த்துள்ளேன். வா.சா.ஆ.17 ஆவணம் நடைமுறைக்கு வரவேண்டுமெனில் அதில் உள்ள அனைத்து நிபந்தனைகளும் அதன் தரப்பினர்களால் நிறைவேற்றப்படவேண்டும் என்றால் சரிதான். வா.சா.ஆ.17 ஆவணத்தில் உள்ள நிபந்தனைகள் எதுவும் நிறைவேற்றப்படாத காரணத்தினால் மேற்படி பத்திரம் ஊர்ஜிதத்திற்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனவே, எனது மாமனார் எழுதிவைத்த 05.07.1993ம் தேதிய குடும்ப ஏற்பாடு ஆவணம் நடைமுறைக்கு வந்துவிட்டது என்றும், வா.சா.ஆ.17 ஆவணம் ரத்தாகிவிட்டது என்றும் சொன்னால் சரியல்ல. 05.07.1993ம் தேதிய ஏற்பாடு ஆவணம் எங்கள் தரப்பிற்கு எதிராக உள்ள

காரணத்தினால் அதை மறுத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) வா.சா.ஆ.17 ஆவணத்தின் அடிப்படையில் எனது கணவர் தபசில் சொத்தை அடைந்ததாக குறிப்பிடும் நிலையில், எந்த தேதியில் எனது கணவரின் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்றால் அது எனக்கு நினைவில்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் 02.05.2013 ம் தேதிதான் எனது கணவருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளதாக காணப்படுகிறது என்றால் சரிதான். எனது கணவரின் பெயரில் தவறுதலாக பட்டா வழங்கப்பட்டுள்ளதாக எனது கணவரின் சகோதரர்கள், வருவாய்த்துறை அதிகாரிகளிடம் முறையீடு செய்திருந்தார்கள் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் வருவாய் கோட்டாட்சியர் விசாரணை நடத்தி 07.08.2017 ம் தேதிய உத்தரவின்படி எனது கணவர் பெயருக்கு வழங்கப்பட்ட பட்டா ரத்து செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி உத்தரவிற்கெதிராக நாங்கள் மேல்முறையீடு செய்து, 17.05.2019 ம் தேதிய உத்தரவின்படி எங்கள் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவரங்களை குறிப்பிட்டுத்தான் நான் என்னுடைய பிராதை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 07.08.2017 மற்றும் 17.05.2019 ம் தேதிய உத்தரவுகள் மோசடியானவை என நான் குறிப்பிடுவது தவறு என்றால் சரியல்ல. 17.05.2019 ம் தேதிய உத்தரவிற்கு எதிராக நாங்கள் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் அதற்கான அவசியம் ஏற்படவில்லை. 17.05.2019 ம் தேதிய உத்தரவின்படி சூசைமரியானின் வாரிசுகள் அனைவரின் பெயரையும் பட்டாவில் சேர்க்கும்படி உத்தரவானது என்றால் சரியல்ல.

4) எனது கணவரை தவிர்த்து அவருடன் பிறந்தவர்கள் அனைவரும் அவர்களுடைய பாகத்தை பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. எனவே, பிராது தபசில் சொத்துக்களில் 1ம் பிரதிவாதிக்கு 42/48 பங்கு உள்ளது என்றால் சரியல்ல.

6/48 பங்கு மட்டுமே எங்களுக்கு பாத்தியப்பட்டது என்றும், நான் கோரியுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.17 ஆவணத்தை உறுதி செய்யும் வகையில் வேறு ஆதரவுகள் எதையும் நான் தாக்கல் செய்யப்போவதில்லை என்றால் சரிதான். தபசில் சொத்தை பொறுத்து எனது கணவர் அடமான ஆவணம் ஏற்படுத்தியது, அதை தீர்த்தது அனைத்தும் 1993ம் தேதிய ஆவணத்திற்கு பின்னிட்டுதான் என்றால் சரிதான். எனது கணவரின் உடன்பிறந்தவர்கள் எழுதிக்கொடுத்த விடுதலை ஆவணங்கள் செல்லாது என பரிகாரம் கேட்க தபசில் சொத்தின் ஒரு பங்குதாரரான எங்களுக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கில் எனது கணவரின் உடன்பிறந்தவர்களின் வாரிசுகளை சேர்க்காத காரணத்தினால் அவசிய கட்சியினரை சேர்க்காத தோஷத்தால் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தபசில் சொத்துக்களை பொறுத்து ஏதேனும் பத்திரம் பதிவு செய்ய தடைவிதிக்க வேண்டுமென 2ம் பிரதிவாதியை உத்தரவிட கோருவது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளை பொறுத்து எந்தவிதமான வழக்குமூலமும் ஏற்பட்டதாக எனது பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளை வீண் வம்பாக கட்சி சேர்த்துள்ள காரணத்தினாலும் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi